# பதவிகள் - வெற்றிடங்கள்

## கட்டிடங்கள் திணைக்களம்

**(i) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்),IIIஆம் தரம்**
**(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்),IIIஆம் தரம்**
**(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் - பயிலுனர் தரம்**

01. கட்டிடங்கள் திணைக்களத்திலுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள,அத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டிடங்கள் திணைக்களம் தனது கடமைப் பணிகளை மேற்கொள்ளும் கட்டுமானத் தளங்கள் தீவு முழுவதும் பரவிக் காணப்படுவதுடன் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) -III ஆம் தரம் 13 வெற்றிடங்களுக்காவும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் (மின்னியல்),III ஆம் தரத்திலுள்ள 02 வெற்றிடங்களுக்காவும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் -பயிலுனர் தரத்திலுள்ள 07 வெற்றிடங்களுக்காவும் திறந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>**குறிப்பு:1**</u> இலங்கை தொழிலநுட்ப சேவையின் (சிவில்), III ஆம் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையானது வெற்றிடமாக உள்ள எண்ணிக்கைக்கு போதியதாக இல்லாதவிடத்து, பயிலுனர் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்களிருந்து எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிலுனர் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

<u>**குறிப்பு:2**</u> மட்டுப்படுத்திய அடிப்படையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அந்த வெற்றிடங்களுக்கும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

02. இந்த அறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின்படி A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை,''கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,கட்டிடங்கள் திணைக்களம், 2ஆம் தளம், செத்சிறிப்பாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2026.09.04 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் **"கட்டிடத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை (சிவில் /மின்னியல்/ வடிவமைப்பாளர்-பயிலுனர்)'," பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை"** என விண்ணப்பிக்கும் பதவியானது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். கல்வித் தகுதிகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் சான்றுறுதிப்படுத்திய பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் தாமதமாகக் கிடைக்கின்ற,தெளிவற்ற,முழுமையற்ற,அல்லது தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.விண்ணப்பங்கள் பெறப்பட்டதற்கான அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

**03. பணியமர்த்தல ்நிபந்தனைகள்:**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரிமையுள்ள ஓய்வூதியத் திட்டத்துடனானதாகும்.

3.2 பொதுசேவைகள் ஆணைக்குழுவின் நிர்வாக ஒழுங்கு விதிகளிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும்,அரசாங்க நிதி ஒழுங்கு முறைகள்,அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்கு முறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றின் மீது அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்கள் மற்றும் திணைக்கள பணிப்புரைகளிற்கும் நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

**04. பொதுவான தகைமைகள்:**

4.1 இலங்கைபிரசையாக இருத்தல் வேண்டும்.
4.2 சிறந்த குணநலன்களையும் நல்ல உடல் நலத்தையும் கொண்டிருக்கவேண்டும்.
4.3 புதிதாகப் பணியமர்த்தப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற ஒப்புக்கொள்ள வேண்டும்.
4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**05. கல்வித் தகைமைகள்:**

5.1 கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம் / தமிழ் /ஆங்கிலமொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

5.2 இணைந்தகணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞானம் / கணிதம் /தொழில்நுட்பவியல்துறை சார்ந்த மூன்று(03) பாடங்களில கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**06. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

**6.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்),III ஆம் தரம்**

மேலே0.5- இல் குறிப்பிடப்பட்டுள்ளகல்வித் தகைமைகளுக்குமேலதிகமக, பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றைப் பூரணப்படுத்தி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதிக்குள் குறித்த சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

I. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனம் வழங்கிய தேசியதொழில்நுட்ப டிப்ளோமா,
அல்லது
II. தேசியதொழிற் பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்படும் தேசியப் பொறியியல் டிப்ளோமா,
அல்லது
III. கல்விமற்றும் உயர்கல்விஅமைச்சினால் வழங்கப்படும் தேசியஉயர் பொறியியல் டிப்ளோமா,
அல்லது
IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்படிப்ளோமா,
அல்லது
V. இலங்கை பொறியாளர்கள் நிறுவனத்தால் நடத்தப்படும் பொறியியல் தேர்வின் பகுதி1- ஐ வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்,
அல்லது
VI. தொழிற்துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ)6 நிலை தகுதியை பூரணப்படுத்தியிருத்தல்,
அல்லது
VII. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களை கேட்டறிந்து அவற்றின் கருத்துக்களைப் பெற்றபின்னர்,மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானவை என மூன்றாம் நிலைமற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பிற தொழில்நுட்பத் தகுதிகளைப் பெற்றிருத்தல்.

**6.2 வடிவமைப்பாளர் (பயிலுனர் தரம்)**

மேலே0.5- இல் குறிப்பிடப்பட்டுள்ளகல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக,தொழிற்துறையுடன் தொடர்புடைய பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றை முடித்து,அதற்கான சான்றிதழை விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதித் தேதிக்குள் பெற்றிருக்க வேண்டும்.

I. மூன்றாம் நிலை மற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில், பதவிக்குத் தொடர்புடைய துறையில் ஒருபாட நெறியை வெற்றிகரமாக முடித்து,தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்,
அல்லது

II. மூன்றாம் நிலைமற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில்,வடிவமைப்பிலான ஓராண்டு முழு நேரப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்து,அதற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.
அல்லது

III. மூன்றாம் நிலைமற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரி பதவிக்குத் தொடர்புடைய துறையில் தொழிற்துறை தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக முடித்து,அதற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.
அல்லது
IV. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களை கேட்டறிந்து அவற்றின் கருத்துக்களைப் பெற்றபின்னர்,மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானவை என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பிறதொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்றிருத்தல்.

குறிப்பு :
மேலே0.5- இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பாளர் -பயிலுனர் (ஓராண்டுப் பயிற்சி) தரத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட தொழில்சார் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்,பணிக்குரிய பாடத்திட்டத்தின்படி ஓராண்டு கோட்பாட்டு மற்றும் செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே தரம் III சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பபடியில் பணியமர்த்தப்படுவார்கள்.

## 07. ஆட்சேர்ப்புமுறை :

7.1 எழுத்து மூலபோட்டிப் பரீட்சைக்கான நிபந்தனைகள்:

இதற்கென நடத்தப்படும் எழுத்துத் தேர்வானது,கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அங்கீகரிக்கப்படுகின்ற ஓர் நிறுவனத்தால் கொழும்பில் நடத்தப்படும்.அதற்கமைய சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் அறிவிக்கப்படும் ஒருதேதியில் பரீட்சை நடைபெறும்.அதற்கேற்ப விதிக்கப்படுகின்ற விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பரீட்சார்த்திகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.(விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் பூர்த்தி செய்துள்ள தகவல்கள் உண்மையானவை எனக் கருதப்பட்டு அதற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.)

7.2 தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அவர்கள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40%புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைப்படி விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பொருத்தமானவர்கள் அதன்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் தகுதிகள் மட்டுமே அதன்போது பரிசோதிக்கப்படும்.

7.3 எழுத்துத் தேர்வுதொடர்பானவிவரங்கள் பின்வருமாறு.

7.3.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்) பதவிகளுக்கு

| **பாடங்கள்** | **காலம்** | **அதிகபட்ச புள்ளிகள்** | **தேர்ச்சிக்கான புள்ளிகள்** |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுபரீட்சை | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயப் பரப்புசார்ந்த தொழில்நுட்பபரீட்சை | 2½ மணித்தியாலம் | 100 | 40 |

| **வினாத்தாளின் பெயர்** | **பாடத்திட்டம்** |
|---|---|
| 01. நுண்ணறிவு பரீட்சை | புரிந்து கொள்ளும் திறன், தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன்,சரியான முடிவுகளை எடுக்கும் திறன்,புள்ளிவிவர மற்றும் கணிதச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன், மொழித்திறன், அட்டவணைகள்,படங்கள்,குறிப்புகள்,வரைபடங்களைப் பயன்படுத்துதல். |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | **தொழில்நுட்பஉத்தியோகத்தர் (சிவில்) பதவி** பரிமாணங்கள், வடிவமைப்பு அறிவு, அஸ்தி வாரங்கள்,மண் வகைகள்,கட்டுமானப் பொருட்கள்,கட்டிடக் கட்டமைப்பு மற்றும் இறுதி வேலைப்பாடுகள்,கட்டிட வரைபடங்கள் மூலம் அளவீடுகளை எடுத்தல்,மதிப்பீடுகளைத் தயாரித்தல்,நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புகள் பற்றியஅறிவு. |
| | **தொழில்நுட்பஉத்தியோகத்தர் (மின்னியல்) பதவி** கட்டிடங்களில் உள்ளமின்சுற்றுகள் பற்றியஅறிவு,பின்பற்றப்படவேண்டியவிதிமுறைகள்,வடிவமைப்புகள் பற்றியஅறிவு,மதிப்பீடுகள் மற்றும் மின்சுற்றுகளைத் தயாரித்தல்.துல்லியத்தைச் சரிபார்த்தல் |

**7.3.2 வடிவமைப்பாளர் பதவி- பயிலுனர் தரத்திற்கானது**

| பாடங்கள் | காலம் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ச்சிக்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுபரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயப் பரப்புசார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவுபரீட்சை | புரிந்துகொள்ளும் திறன்,தர்க்கரீதியாகசிந்திக்கும் திறன்,சரியானமுடிவுகளைஎடுக்கும் திறன்,புள்ளிவிவரமற்றும் கணிதச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன்,மொழித்திறன்,அட்டவணைகள்,படங்கள்,குறிப்புகள்,வரைபடங் களைப் பயன்படுத்துதல். |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீடசை | உரியஅளவுத்திட்டங்களின் படிகட்டிட வரை படங்களை வரைவதற்கும்,பொருத்தமான அளவில் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் உள்ளதிறன். |

7.4 எழுத்துமூல போட்டிப் பரீட்சைகள் **சிங்களம்/தமிழ** மொழியில் மட்டுமே நடத்தப்படும்.

**08. ஆட்சேர்ப்பு:**

மேற்படி 05மற்றும் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டோரிடையே மேலே07 இல் உள்ள எழுத்துத் தேர்வில் மிக உயர்ந்த புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்றுள்ள தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள்,காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில், இலங்கை தொழில்நுட்பசேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III,/(சிவில்) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) தரம் III மற்றும் வடிவமைப்பாளர் பயிலுனர் தரம் ஆகியவற்றில் நியமிக்கப்படுவார்கள்.

**09. சம்பளஅளவுத்திட்டம்:**

பொதுநிர்வாகசுற்றறிக்கைஇல.10/2025இலுள்ளMN-3-2025கீழ்

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்) தரம் III
ரூ. 52,250/- 10 x 800 - 11 x 1190-10 x 1320- 10 x 1350- 100,040/-
(பொதுநிர்வாகசுற்றறிக்கை இல.10/2025- இன் பட்டோலைII இன் படிசம்பளங்கள் வழங்கப்படும்)

வடிவமைப்பாளர்(பயிலுனர்தரம்)

மாதாந்த உதவித் தொகை ரூ.43,274/-
(பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2025- இன் பட்டோலை VIஇன் படி சம்பளங்கள் வழங்கப்படும்)

**10. பரீட்சைக்கட்டணம்:**

பரீட்சைக்கட்டணம் ரூ. 1,500ஆகும். விண்ணப்பதாரர்கள்,திரும்பப் பெறமுடியாதரூ. 1,500பரீட்சைக்கட்டணத்தை,நாட்டில் அமைந்துள்ளஎந்தவொரு இலங்கைவங்கிக் கிளையிலும் **“கட்டிடங்கள் திணைக்களத்தின் பத்தரமுல்ல இலங்கைவங்கிக் கிளையிலுள்ள கணக்கு இல. 7042710 இற்கு**”வைப்புச் செய்தல் வேண்டும்.அதற்கான பற்றுசீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் எண் 12-இன் கீழ் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.

11. எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவரின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படும் எந்தவொரு தவறான தகவலும்,தேர்வுக்குப் பிறகு கண்டறியப்பட்டால்,அவரைத் தகுதியிழக்கச் செய்வதுடன்,பணியிலிருந்து நீக்கப்படுவதற்கும் வழிவகுக்கக் கூடும்.

**12. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

விண்ணப்பதாரர்கள், தங்களது மாதிரி கையொப்பத்தை அரசாங்க பாடசாலைஅதிபர்/ஓய்வுபெற்றஅதிபர், பிரிவுக் கிராம உத்தியோகத்தர்,பகிரங்க நொத்தாரிசு,முப்படைகளின் தலைமை உத்தியோகத்தர், அல்லது ரூபா 82,150 அல்லது அதற்குக் கூடிய மாதாந்த சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்கசேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரயையின் விகாராதிபதி, தலைமை மதகுரு அல்லது ஏனைய மத ஸ்தலமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுரு ஆகியோரில் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயத்திலும்,கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகமே இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மேலும் சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால்,சிங்களமொழி மூலமான அறிவிப்பே செல்லுபடியாகும்.

**பொறி.டபிள்யூ.ஆர்.என்.ஆர்.பிரேமச்சந்திர**
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்

கட்டிடங்கள் திணைக்களம்,
செத்சிரிபாய,
பத்தரமுல்ல.
2026 .07.30